## அமைச்சர் செந்தில் பாலாஜிக்கான சிகிச்சைகளை தாமதப்படுத்தும்

# அமலாக்கத்துறையை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

## தமிழ்நாடு மருத்துவர்கள் சங்கம் அறிக்கை!

சென்னை,ஜூன் 17 - அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அளிக்கப்பட வேண்டிய சிகிச்சையை வேண்டுமென்றே தாமதப் படுத்தும் அமலாக்கத்துறைக்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதாக தமிழ்நாடு மருத்துவர்கள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாடு மின்சார துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் இதய இரத்த குழாயில் அடைப்பு ஏற்பட்டு ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், அவருக்கு இதய அடைப்பை சரி செய்ய பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று ஓமந்தூரார் மருத்துவமனை சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது, மேலும் ESI மருத்துவமனை மருத்துவர்கள் குழுவும் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில் தமிழக அரசின் மருத்துவ குழுவின் பரிந்துரையை ஏற்று சிகிச்சை தொடரவிடாமல் டெல்லி AIIMS ல் இருந்து மருத்துவர்கள் குழு ஓமந்தூரார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியை பரிசோதிக்க வேண்டும் என்று அமலாக்கத்துறை வற்புறுத்தி வருகிறது.

இது உலக அளவில் மருத்துவ தலைநகராக திகழும் சென்னையில் உள்ள மாநில அரசு மருத்துவர்கள் மற்றும் ஒன்றிய அரசு மருத்துவர்களின் அறிக்கையை உதாசீனப்படுத்தி, ஒட்டுமொத்த தமிழக மருத்துவத்தின் தரத்தைக் கொச்சை படுத்துவதாகும், இது உயிர் காக்கும் அறுவை சிகிச்சையை மேலும் தாமதப்படுத்தி, உடல்நிலை மேலும் மோசமடைய வழிவகுக்கும், இத்தகைய நடவடிக்கையை தமிழ்நாடு மருத்துவர்களின் சார்பில் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழ்நாடு மருத்துவ கட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு அரசு மருத்துவர்களின் ஆற்றல்,நம்பகத்தன்மை கண்ணியம் ஆகியவற்றை கேள்வி எழுப்பும் அமலாக்க துறையின் முடிவுகளை தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் TNMOA வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் மு.அகிலன் தெரிவித்துள்ளார்.

**ஜனநாயக தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் அறிக்கை!**

தமிழ்நாடு அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அளிக்கப்பட வேண்டிய சிகிச்சை முறைக்கு ஏற்பட்டு வரும் தாமதத்திற்கான சந்தேகம் கண்டிக்கத்தக்க வகையில் உள்ளது.

பொதுவாக இருதய நோயால் அதுவும் மூன்று அடைப்புகள் உள்ள நோயாளிக்கு உடனடியாக சிகிச்சை தந்து அவரை காப்பாற்ற வேண்டும். இது எல்லோருக்கும் பொதுவாக கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தனியார் துறையாகட்டும் அரசு துறையாகட்டும், மருத்துவ துறையில் சிறந்து விளங்குவதாகும்.

அப்படிப்பட்ட நிலையில் தாமதத்தை தவிர்த்து, உடனடியாக அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு தேவையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அச்சங்கத்தின் தலைவர் டாக்டர் பாலகிருஷ்ணன் , செயலாளர் டாக்டர் செந்தில்குமார் தெரிவித்துள்ளனர்.

## அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சிகிச்சை: மோடி அரசின்

# அமலாக்கத்துறையின் அராஜகச் செயல் கண்டிக்கத்தக்கது!

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் அறிக்கை!



சென்னை, ஜூன் 17 - அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு தரப்பட வேண்டிய அவசர சிகிச்சையை வேண்டுமென்றே தமதப்படுத்தும் நோக்கில் செயல்படும் மோடி அரசின் அமலாக்கத்துறையின் அராஜகச் செயல் கண்டிக்கத்தக்கது என்று சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்க பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச்செலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது. அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு, தற்போது சென்னை அண்ணாசாலையில் உள்ள அரசினர் பன்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு ஆஞ்சியோ கிராம் செய்ததில் இரத்தக் குழாயில் மூன்று அடைப்பு இருக்கிறது என்று தெரிய வந்துள்ளது.

அதனால் மருத்துவக் குழு அவருக்கு உடனடியாக சர்ஜரி செய்து அடைப்பை சரி செய்ய வேண்டும். அவருக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் அமலாக்கத் துறை தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லி, நேற்றைய தினமே ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கலைஞர் நகர் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களை அழைத்து வந்தது. அதேபோன்று எய்ம்ஸ் மருத்துவர்களை வரவழைத்து இருக்கிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழ்நாடு அரசு மருத்துவர்களை இழிவுபடுத்துகின்ற செயலுமாகும்.

தமிழ்நாடு மருத்துவ நிபுணர்கள் ஆஞ்சியோ கிராம் செய்து, அதில் அடைப்பு இருப்பதை எல்லா டாக்டர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

இதனை உலக முழுவதும் உள்ள டாக்டர்கள் ஏற்றுக்கொள்வார்கள். எனவே தமிழ்நாட்டு அரசு மருத்துவர்கள் மீது நம்பிக்கை இல்லை அதனால் நாங்கள் எய்ம்ஸ் மருத்துவர்களை கொண்டு வருகிறோம் என்று அமலாக்கத் துறை அடவாடி செய்வது, தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்துகிற செயலாகும்.

**நாங்கள் என்ன கேட்கிறோம்?**

அமலாக்கத் துறை யாரு? சுயேச்சையான அமைப்பா? அது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அமைப்பாகும்.

ஒன்றிய அரசு என்ன உத்தரவு போடுவதோ அதை செயல்படுத்துவதற்காகத்தான் அமலாக்கத் துறை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பா.ஜ.க.வினுடைய கிளையைப் போன்று அமலாக்கத் துறை செயல்படுகிறது.

நாடு முழுவதும் எதிர்க்கட்சியினரை மிரட்டுகின்ற போக்கை அமலாக்கத்துறை செய்கிறது. அவ்வாறு இருக்கும்போது, அமலாக்கத்துறை ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படுகிறது. இந்த அமலாக்கத்துறை தமிழ்நாடு அரசு மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அப்படி இருக்கும்போது எங்களுக்கு எய்ம்ஸ் மருத்துவமனை மீது எப்படி நம்பிக்கை வரும்? எய்ம்ஸ் மருத்துவமனை யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது? அமலாக்கத் துறை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதோ அதேபோலதான் எய்ம்ஸ் மருத்துவமனையும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

எனவே மருத்துவர்களை மாநில மருத்துவர், மத்திய மருத்துவர் என்று பிரித்து அவர்களுக்கிடையே ஒரு மோதல் போக்கை உருவாக்குவது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் நியாயமான - நேர்மையான அடிப்படையில் தான்இந்தபரிசோதனையை செய்திருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் மருத்துவ நெறிமுறைகளுக்கு உட்பட்டுதான் அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்கின்ற பரிந்துரையை செய்திருக்கிறார்கள். எனவே அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுக்கு உடனடியான அந்த அறுவை சிகிசைச் செய்யாமல் அமலாக்கத்துறை கால தாமதத்தால் அவருடைய உயிருக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு முழுமையான பொறுப்பை அமலாக்கத் துறையும், மோடி அரசாங்கமுமே ஏற்க வேண்டும். எனவே மோடி அரசில் அமலாக்கத் துறையின் இப்படிப்பட்ட அராஜகச் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு

# அரசு டாக்டர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதா?

## தமிழ்நாடு முதுநிலை சேவை டாக்டர்கள் சங்கத் தலைவர், டாக்டர் சாமிநாதன் கண்டனம்!



சென்னை, ஜூன் 17 - தமிழ்நாடு முதுநிலை சேவை டாக்டர்கள் சங்கத் தலைவர் டாக்டர் சாமிநாதன் ஒன்றிய அமலாக்கத்துறையை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு அரசு டாக்டர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதா? என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

தமிழ்நாடு சர்வீஸ் டாக்டர்கள் மற்றும் போஸ்ட் கிராஜுவேட் சங்கத்தலைவர் டாக்டர் சாமிநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

14.6.2023 அன்று சென்னையில் தமிழ்நாட்டின் மின்சாரத்துறை அமைச்சர் மீது ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது.

அந்த நடவடிக்கையின் போது அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அவர் தமிழ்நாடு அரசால் நடத்தப்படுகின்ற ஓமந்தூரார் உயர் சிகிச்சை மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு அங்கு இருக்கக்கூடிய உயர் மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் அவருக்கு இருதய ரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று கண்டுபிடித்து அதற்கு சான்றும் அளிக்கப்பட்டது. இது தொலைக்காட்சிகளிலும், ஊடகங்களிலும் முழுவதும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அமலாக்கத்துறையில் இருந்து இந்த மருத்துவ அறிக்கையின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி இருக்கிறார்கள். அது மட்டுமில்லாமல் அமைச்சர் செந்தில் பாலாஜியை மீண்டும் பரிசோதிக்க வேண்டும், உடனடியாக நாங்கள் டெல்லிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். அவர்கள் அழைத்துச் சென்று பரிசோதனை வேண்டுமானால் செய்து கொள்ளட்டும்,

எங்கள் அரசு மருத்துவர்கள், தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் அறிக்கை மீது நம்பிக்கை இல்லை என்று கூறுவது தமிழ்நாடு சுகாதாரத்துறை மீது இவர்கள் ஏற்படுத்திய ஒரு களங்கமாகத்தான் நாங்கள் கருதுகிறோம்.

ஏனென்றால் தொடர்ச்சியாக தமிழக சுகாதா ரத்துறை மீது ஒன்றிய அரசு மீண்டும் மீண்டும் தாக்குதலைத் தொடுக்கின்றது.

மே மாதம் 5-ஆம் தேதி சிதம்பரத்தில், குழந்தைத் திருமணம் நடந்த சம்பவத்தில் இருவிரல் பரிசோதனை செய்யப்பட்டதாக தமிழ்நாட்டின் ஆளுநர் குறிப்பிட்டு இருந்தார்.

அதனை கூறிய பிறகு ஒன்றிய அரசு ஒரு ஆய்வறிக்கை வேண்டும் என்று ஆய்வுக்குழு அனுப்பி வைத்தது. அந்த ஆய்வுக்குழுவில் வந்தவரும் மீண்டும் அது செய்யப்பட்டது, செய்யப்பட்டது என்று கூறிக்கொண்டி ருக்கிறார்கள்.

மருத்துவர்கள் அதனைச் செய்யவில்லை. நீதிமன்ற வழிகாட்டுதலின் படி செய்யப்பட்டது என்று கூறி இருக்கிறார்கள்.

இதுபோல் ஒன்றிய அரசு தொடர்ச்சியாக தமிழ்நாடு சுகாதாரத்துறை மீது தமிழ்நாடு அரசு மருத்துவர்களுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பேசி வருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

நாங்கள் ஒன்றிய அரசுக்காகவோ, மாநில அரசுக்காகவோ பணிபுரிபவர்கள் அல்ல. எங்களிடம் வரும் நோயாளிகளுக்கு பணிபுரிபவர்கள். காவல்துறை அழைத்து வருகின்ற யாருக்க வேண்டுமானாலும் சான்று வழங்குவது எங்களது கடமை. அதனை நியாயமாகத் தான் செய்து வருகிறோம்.

அதனால் தயவுசெய்து அரசு மருத்துவர்கள் மீது களங்கம் விளைவிப்பதினை தவிர்த்து கொள்ள வேண்டும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 11/2 லட்சம் மாணாக்கர்களுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கல்!

# மாணவர்கள் பெற்றோரின் கனவினை பூர்த்தி செய்ய வேண்டும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு !



சிவகங்கை, ஜூன் 17 - சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாவட்டத்தில் 1351 பள்ளி மாணவ - மாணவிகளுக்கு ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 681 மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா நோட்டு, பாடப் புத்தகங்களை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஒன்று முதல் 12 வரை பயிலும் அரசு பள்ளி மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா நோட்டு, பாட புத்த கங்களை வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார். அதுவும் பள்ளி திறந்தவுடன் அனைவருக்கும் வழங்குமாறு கூறியுள்ளார். அதன் அடிப்படையில் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா நோட்டு,பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. இது தவிர படிப்பதற்கு தேவையான அனைத்து கல்வி உபகரணங்கள் உதவிகள் அரசின் சார்பில் செய்யப்பட்டு வருகின்றது.

**படிப்பில் கவனம் செலுத்திட வேண்டும்!**

எனவே மாணவ - மாணவிகள் பெற்றோர்களின் கனவினை நினைவாக்கிடும் வகையில் படிப்பில் முழு கவனம் செலுத்தி நல்ல முறையில் படித்திட வேண்டும். நடைபெற்று முடிந்த எஸ்.எஸ்.எல். சி. தேர்வில் சிவகங்கை மாவட்ட அரசு பள்ளி மாணவ - மாணவிகள் மாநில அளவில் முதலிடமும், அரசு தனியார் பள்ளி மாணவர்கள் இரண்டாவது இடமும் பெற்றது பாராட்டுக்குரியதாகும். தொடர்ந்து மாணவ - மாணவிகள் படிப்பதில் மட்டும் கவனம் செலுத்திட வேண்டும். உங்களை திறமையாளர்களாக உருவாக்கிடும் ஆசிரியர்களின் உழைப்பிற்கு பரிசாக நீங்கள் நன்றாக படித்திட வேண்டும்.

அதுவே அவர்களுக்கு செய்யும் நன்றிக்கடன் ஆகும். பள்ளி படிப்பை தவிர உயர் கல்வி படிப்பதற்கும் முதல்வர் தளபதி அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது. எனவே அரசின் திட்டங்களை நன்றாக பயன்படுத்தி ஏழை, எளிய, கிராமப்புற மக்கள் நன்றாக படித்துவாழ்வில் உயர்ந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அரசின் அனைத்து நலத் திட்டங்களையும் அனைவரும் நன்றாக தெரிந்து கொண்டு அதன் பயன்களையும் அடைய வேண்டும். இப்பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் தேவை என்று கூறப்பட்டுள்ளது. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஒன்றியக் குழு தலைவர் எஸ்.சண்முகவடிவேல், மாவட்ட கவுன்சிலர் ரவி, ஒன்றிய கவுன்சிலர் ராமேஸ்வரி, திருக்கோட்டியூர் ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியன் மாவட்ட முதன்மைக் கல்விஅலுவலர் சுவாமிநாதன், மாவட்டகல்வி அலுவலர் மாரிமுத்து, ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

நிகழ்ச்சியில் விவசாய அணி எஸ்.எஸ்.அருணாசலம்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சுப. சண்முகநாதன், ஒன்றிய செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைமை ஆசிரியர் திருமதி கலா நன்றி கூறினார்.



தென்காசி தெற்கு மாவட்டம் செங்கோட்டை ரயில்வே கேட் பகுதியைச் சேர்ந்த முருகன் – தமிழ்ச்செல்வி (தி.மு.க. தலைமை பொதுக்குழு உறுப்பினராக இருந்து வருகிறார்.) ஆகியோரின் மகன் ராஜேஷ் (வயது 24 )(செங்கோட்டை நகராட்சி தூய்மை பணி மேற் பார்வையாளர்) கடந்த 14.06.2023 அன்று செங்கோட்டை நகராட்சி வளாகத்தில் கொலை செய்யப்பட்டார். செங்கோட்டையில் உள்ள தமிழ்ச்செல்வி வீட்டிற்கு தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் நேரில் சென்று அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் சுந்தரமகாலிங்கம், ரவிசங்கர், சீனித்துரை, திவான்ஒலி, அழகு சுந்தரம்,ஜெயக்குமார், அன்பழகன், ஆறுமுகசாமி, சாமிதுரை, ரஹீம், வெங்கடேசன் (செங்கோட்டை) சாதிர் (தென்காசி) ஷேக் அப்துல்லா, ஈஸ்வரன், சிவ அருணன், சுப்ரமணியன், பி.எஸ்.மாரியப்பன், வீராணம் சேக், காசிதர்மம் துரை, மூவண்ணா மசூது, ராமராஜன், பரமசிவன் உட்பட கழகத்தினர் பலர் சென்றனர்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில்

# திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| தேதி/ நேரம் | மாநகரம்/ஒன்றியம்/ பேரூர்/பகுதி | நடைபெறும் இடம் | பேச்சாளர்கள் பெயர் |
|---|---|---|---|
| 17.06.2023 வியாழன் மாலை - 5.00 மணி | தணிகாசலம் செயலாளர் அஞ்செட்டி ஒன்றியம் | கோட்டையூர் | குடியாத்தம் குமரன் |
| மாலை - 7.00 மணி | தணிகாசலம் செயலாளர் அஞ்செட்டி ஒன்றியம் | நாட்றாம்பாளையம் | |
| 18.06.2023 ஞாயிறு மாலை - 5.00 மணி | சி.ஆனந்தய்யா பகுதி செயலாளர் ஒசூர் மேற்கு பகுதி | பேடரப்பள்ளி | கரூர் முரளி |
| மாலை - 6.00 மணி | எம்.கே.வெங்கடேஷ் பகுதி செயலாளர் ஒசூர் வடக்கு பகுதி | பாகலூர் அட்கோ | |
| மாலை - 7.00 மணி | ராமு பகுதி செயலாளர் ஒசூர் கிழக்கு பகுதி | காந்தி சிலை | |
| மாலை - 8.00 மணி | கே.திம்மராஜ் பகுதி செயலாளர் ஒசூர் தெற்கு பகுதி | இரயில் நிலையம் | |
| 22.06.2023 புதன் மாலை - 4.00 மணி | வி.சீனிவாசுலு செயலாளர் தளி வடக்கு ஒன்றியம் | மதகொண்டப்பள்ளி | சைதை சாதிக் |
| மாலை - 5.00 மணி | ஆர்.திவாகர் செயலாளர் தளி தெற்கு ஒன்றியம் | ஜவளகிரி | |
| மாலை - 6.00 மணி | ஆர்.திவாகர் செயலாளர் தளி தெற்கு ஒன்றியம் | கக்கதாசம் | |
| மாலை - 7.00 மணி | வி.சீனிவாசுலு. செயலாளர் தளி வடக்கு ஒன்றியம் | பென்னங்கூர் | |
| 23.06.2023 சனி மாலை - 4.00 மணி | கே.நாகேஷ் செயலாளர் சூளகிரி வடக்கு ஒன்றியம் | எ.செட்டிப்பள்ளி | சேலம் சுஜாதா |
| மாலை - 5.00 மணி | கே.நாகேஷ் செயலாளர் சூளகிரி வடக்கு ஒன்றியம் | அத்திமுகம் | |
| மாலை - 6.00 மணி | கஜேந்திரமூர்த்தி செயலாளர் ஒசூர் ஒன்றியம் | கக்கனூர் | |
| மாலை - 7.00 மணி | கஜேந்திரமூர்த்தி செயலாளர் ஒசூர் ஒன்றியம் | நல்லூர் செக்போஸ்ட் | |
| 24.06.2023 வெள்ளி மாலை - 4.00 மணி | தஷ்தகீர் செயலாளர் கெலமங்கலம் பேரூர் | கெலமங்கலம் பேருந்து நிலையம் | ஆடுதுறை உத்திரபதி |
| மாலை - 5.00 மணி | ஸ்ரீதர் செயலாளர் கெலமங்கலம் மேற்கு | தொட்டபேளூர் | |
| மாலை - 6.00 மணி | டி.ஆர்.சீனிவாசன் செயலாளர் தேன்கனிக்கோட்டை பேரூர் | தேன்கனிக்கோட்டை பேருந்து நிலையம் | |
| மாலை - 7.00 மணி | ஸ்ரீதர் செயலாளர் கெலமங்கலம் மேற்கு | கண்டகானப்பள்ளி | |

அந்தந்த பகுதிகளில் நடைபெறும் தெருமுனை பிரச்சார கூட்டங்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பாக ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ.**
செயலாளர்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு,க,